1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதிய சபையின் (“சபை”) இன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்
1.5.1. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
i)	காப்புறுதி கொள்கையுடையோர் பிரதான தரவுடனான ஒருங்கிணைந்த முறைமை சபையில் இருக்கவில்லை. ஆகவே, முறையீனமாக கோரிக்கை விண்ணப்ப ஏற்றல், கோரிக்கை தகவல்களை தொலைத்தல், கோரிக்கை விண்ணப்பங்களின் தவறுகளை திருத்துதல் மற்றும் கோரிக்கைகளை செயற்படுதுவதில் தேவையற்ற தாமதங்கள் என்பன ஏற்பட்டிருந்தது. 2025 பெப்ரவரி 28	2025 மார்ச் 31 இல் உள்ளவாறு 936,600 அரச உத்தியோகத்தர் அக்ரஹார பங்களிப்பு திட்டத்திற்கு பங்களிப்புளில் 361,424 மாத்திரமே NITF இணைய தளத்தில் நுழைந்திருந்தனர் 244,626 மாத்திரம் ஆய்வுசெய்யப்பட்டது. அரசாங்க நிறுவனங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு நாளது வரையாக்கப்பட்டு அல்லது ஊழியர் தரவு மெய்மையாய்வு	சபையானது தரவின் உண்மை தன்மை மற்றும் தகுதியை உயர்த்துவதற்கு ஒருங்கிணைந்த முறைமையை தாபிப்பதற்கும் பேணுவதற்கும் வேண்டப்பட்டள்ளது.

	இல் உள்ளவாறு அரச உத்தியோகத்தர் அக்ரஹார காப்புறுதி திட்டம் மற்றும் ஓய்வூதிய அக்ரஹார காப்புறுதி திட்டத்தில் கொள்கை உடையாளரின மொத்த எண்ணிக்கை 1,362,886 ஆக இருந்தது. எவ்வாறாயினும், சபையானது கொள்கை உரியையாளரின் மொத்த எண்ணைிக்கை மற்றும் 2025 மே 30 இல் உள்ளவாறு அவர்களுடைய அக்ரஹார காப்புறுதி திட்ட விபரங்களை வழங்குவதற்கு தவறியிருந்தது.	செய்யப்பட்டிருக்கவில்லை. இதனை தீர்ப்பதற்கு NITF உறுப்பினர் ஆய்விற்காக W&OP தரவிற்கு நுழைவதற்கு ஓய்வூத்திய திணைக்களத்துடன் MoU கைச்சாத்திட்டிருந்தது. இந்த ஒருங்கிணைவிற்கான முறைமை நாளதுவரையாக்கல் அண்மையில் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 2025 யூன் 30 அளவில் இறுதியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்க நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை. தரவின் உண்மைத் தன்மையை முன்னேற்றுவதற்கும் மெய்மையாய்வை நெறிப்படுத்தவதற்கும் இந்த பரிந்துரை இலக்காக கொண்டுள்ளது.	
ii)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் காப்புறுதி நிலுவை கோரிக்கை ஏற்பாடுகள் ரூபா 3,233,733,923 ஆக இருந்தது. (2016 மற்றும் 2017 இல் செலுத்த வேண்டிய வெள்ள கோரிக்கைகளை செலுத்தாமல் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,248,073,982 உம் 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 5,616,058,199 உம் இருந்தது) மற்றும் மீளாய்வாண்டிற்காக செலுத்தப்பட்ட மீள்காப்புறுதி கோரிக்கைகள் ரூபா 192,372,895 மற்றும் ஐ.அ.டொலர் 12,387 ஆக இருந்தது. (2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 308,363,311 மற்றும் ஐ.அ.டொலர் 403,050 மற்றும் 2025 சனவரி முதல் ஏப்ரல் வரை ரூபா 66,491,858 மற்றும் ஐ.அ.டொலர 221,855 ஆக இருந்தது) எவ்வாறாயினும், மீள் காப்புறுதி கோரிக்கைகள் பேணப்பட்டிருந்ததுடன் எக்செல் தாளில் கையாள் பதியப்பட்டிருந்தது. ஆகவே, மீள் காப்புறுதியை கையாள்வதற்கு முறையான முறைமை எதுவும் கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	திணைக்களமானது 2024 இலிருந்து மீள்காப்புறுதி கோரிக்கைகளை நிர்வகிப்பதற்கு ஒருாக்கிள் கோரிக்கை முறைமையை பயன்படுத்துவதற்கு நடவடிககை எடுத்திருந்தது. இதன்படி, இந்த ஒராக்கிள் முறைமை கோரிக்கை அனுமதிக்கும் கட்டத்தில் கோரிக்கை எல்லை நிலையிலிருந்து முழு நடை முறைகளையும் கையாள்கின்றது. மேலும், சகல கோரிக்கைகளும் சான்றுபடுத்தல் கட்டத்திலிருந்து அனுமதிக்கும் கட்டத்திற்கு நெருக்கமாக கண்காணிப்பு செய்யப்படுவதற்கும் நிதி அதிகார கையளிப்பு எல்லைபடி கட்டுப்படுத்துவதற்கும் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஒராக்கிள் முறைமை ஒராக்கிள் கொரிக்கை முறைமை ஊடாக நேரடியாக கோரிக்கை அறிக்கையை பெறுவதற்குஅ இயலக்கூடியவாறு மேலும் விருத்தி செய்யப்படுகின்றன. மேலும், IT ஆலோசனையாளர் உதவியுடன் ERP முறைமை ஊடாக கோரிக்கையை விருத்திசெய்கின்ற நடைமுறை செயற்பாட்டில் உள்ளது.	சபையானது மீள் காப்புறுதி கோரிக்கைகளின் கையாளல் சரியான நேரம் மற்றும் முறைமையை உறுதிப் படுத்துவதற்கு மீள் காப்புறுதி கோரிக்கை முகாமைத்துவ முறைமையொன்றை அமுலாக்கப்பட வேண்டும்.

iii) சபையானது 2023 சனவரி 31 இல் இருக்கின்ற திருப்பிச் செலுத்தல் மேவுகை காலாவதிான பின்னர் அதன் சொந்த ஆபத்தை மேவுவதற்கு கட்டாயமாக 30 சதவீத மீள்காப்புறுதி மேவுகை பெற்றிருக்கவில்லை. இது குறித்த பகுதிகளில் இழப்பு ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புக்களை உள்வாங்குவதற்கு சபையினுடைய இயலளவைக் குறைக்கக்கூடும். நிறுவனத்தின் இது கடன் வழங்கும் முகவர்களால் கடன் வழங்கலை குறைப்பதற்கு சபையினுடைய ஒட்டு மொத்த அபத்து விபரம் மற்றும் முன்னுரிமையை அதிகரிக்ககூடும்.

ஒட்டுமொத்தமாக திருப்பிச் செலுத்தல் மேவுகை இன்மையால் சபையினுடைய நிதி நிலமை மற்றும் ஸ்திரத் தன்மை மற்றும் இலங்கையினுடைய காப்புறுதி காப்புறுதியை பாதிக்கின்ற சாத்தியம் என்பன குறிப்பிடத்தக்களவு பாதிக்கும். காப்புறுதி தவணைப்பண மற்றும் கோரிக்கை தீர்ப்பனவுகளின் நலவான செயலாற்றல் காரணமாக காப்புறுதி மேவுகையை பெறுவதற்கு சபையினுடைய இயலாமை காரணமாக உள்ளது. இதன் காரணமாக சபையின் கடன் பெறல் வரையறுத்த பிச் றேட்டிங் லங்காவால் 2023 ஆகஸ்ட் மாதத்தில் A – இலிருந்து BBB+ இற்கும் 2023 ஒக்தோபரில் *BBB+* இலிருந்து *BBB* இற்கு இரண்டு தடவை வீழ்ச்சியடைந்திருந்தது. 2025 பெப்ரவரியில் முழுவதும் கடன் பெறல் BBB ஆக உள்ளது மேலும், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுதல் ஆணைக்குழு (IRCSL) போதிய திருப்பிச் செலுத்துதல்களை ஒழுங்கு செய்யப்படும் வரை ஆரம்ப காப்புறுத மீது 30 சதவீதம் ஏற்றலை நிறுத்துவதற்கு 2024 யூலை 18 ஆந் திகதிய IRCSL/DG/SUP/2024/07/236 ஆம் இலக்க கடிதம் மூலம் சபைக்கு நெறிப்படுத்தலை வழங்கியிருந்ததுடன் IRCS இற்கு 2023.01.31 இலிருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் மீள்காப்பீட்டு மேவுகையை பாதுகாப்பதற்கு சர்வதேச போட்டி கோள்வி கோரல் (ICB) ஊடாக ஐந்து சந்தர்பங்களில் செய்திருந்தது. ஆனால் சகலதும் கேள்விகள் சமர்ப்பிக்காமை, இணங்காமை அல்லது கேள்வியாளரின் தகைமையின்மை காரணமாக வெற்றியளித்திருக்கவில்லை.

தற்போது கொள்வனவு நடைமுறை ஏற்கனவே கூட்டப்பட்ட கேள்வி மதிப்பாய்வு குழுவுடன் (BEC) செயல்படுகின்றது. மீள் காப்புறுதியின் விசேட தன்மையுடன் சீரமைக்கபடப்ட நியம கொள்வனவு நடைமுயைிலுள்ள சவால்கள் காரணமாக தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் கொள்வனவு ஆணைக்குழு (NPC) மற்றும் உரிய அமைச்சு என்பவற்றின் ஆலோசனையுடன் வடிவமைக்கப்பட்ட கொள்வனவு கட்டமைப்பை விருத்தி செய்கின்றது. இந்த புதிய பொறிமுறையை வடிவமைப்பதற்கு குழு நியமிக்கப்பட்டது. மீள்காப்புறுதி மேவுகையின்மை மற்றும் நாட்டின் கடன் வீதங்களில் வீழ்ச்சி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினுடைய கடன் போக்கில் எதிர்மயைான தாக்கத்தை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், போராட்டம், கலகம், சிவில், குழப்பம் மற்றும் பயங்கரவாதத்திற்கான (SRCC&T) நிதிய மீள்காப்புறுதி உடன்படிக்கை வீத மீளாய்வின் பின்னர் 2024 திசெம்பரில் பாதுகாப்பாக வெற்றியளித்துள்ளது.

சபையானது தேசிய கொள்வனவு ஆணைக்குழு (NPC) மற்றும் உரிய அமைச்சு என்பவற்றின் ஆலோசனையுடன் மீள் காப்புறுதி மற்றும் திருப்பிச் செலுத்துதலிற்காக விசேட கொள்வனவு கட்டமைப்பின் அபிவிருத்தி மற்றும் அமுலாக்கலை நிறை வேற்றப்பட வெண்டும்.

நிரூபிக்கப்பட்டது. ஆகவே, இது சபையின் காப்புறுதி ஆபத்து முகாமைத்தவம் மற்றும் காசு பாய்ச்சல் முகாமைத்துவம் என்பவற்றினை எதிர்மறையாக பாதிக்கும்.

1.5.2. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமங்களிற்கான குறிப்புகளுடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
LKAS 12 இன் பிரகாரம், பிற்போட்ட வரி சொத்து / பொறுப்பு விசேட விலக்கழிக்க இயலாத சகல தற்காலிக வரி வித்தியாசங்களிற்காக அனுமதிக்கப்பட வேண்டும். சபையானது மீளாய்வாண்டிற்கான பிற்போட்ட வரிக் கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய சொத்துக்கள் மற்றும் கற்பனைச் சொத்துக்களின் உரிமை கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சபையானது எதிர்காலத்தில் கற்பனைச் சொத்து விடயங்கள் மற்றும் வாடகை கொள்வனவு சொத்து விடயங்கள் என்பவற்றினை கருத்திற்கொள்ளும்.	சபையின் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை கணிப்பீடு செய்யும் போது எரிய கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

1.5.3. கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
i)	ரூபா 19,993,473 ஆன தொகை அனுப்புதல்கள் பெற வேண்டியவையாக (NNIDS) 5 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்ததுடன் இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் நியாயமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	ஏற்றுக்கொள்கின்றோம்	அறவீட்டு தன்மைய விரிவான வரிமதிப்பீட் பின்பற்றி சபையான நீண்டகாலம் நிலுவையாகவிருக்கின்ற பெறவேண்டிய மீள்காப்புறுதி மீதி ம போதிய ஏற்ப செய்யப்பட வேண்டும்.
ii)	2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலிருந்து முறையே ரூபா 521,287,319 மற்றும் ரூபா 251,742,612 தொகையான மறுகாப்பீட்டு கோரிக்கை செலுத்த வேண்டியவை மாற்றமடையாதிருந்ததென அவதானிக்கப்பட்டது. இன்னமும் இருக்கின்ற அந்த கொடுப்பனவுகளை செய்வதற்கான ஏற்பாடுகள் போதுமானதாக உள்ளதாவென உறுதிப்படுத்தி இருக்கவில்லை.	2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் கோரிக்கைகளிற்கான 2024.07.10 அளவில் ஒதுக்க உறுதிப்படுத்தல்களை வேண்டி 07.10.2024 2024.08.26 மற்றும் 2024.09.25 ஆந் திகதிகளில் சகல பொது காப்புறுதி கம்பனிகளிற்கும் கடிதங்கள் அனுப்பபட்டிருந்தன. சில கம்பனிகள் இணங்கியிருந்த அதேநேரம் ஏனையவை அவர்களுடைய விபரங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபை மிகை ஒதுக்கங்களை அகற்றுவதற்கு அனுமதித்திருந்தது. இதன் விளைால் 2026 மற்றும் 2017	செலுத்த வேண்டிய ப காப்புறுதி கோரிக்கை ப மீதான மெய்மையாய் செயற்பாடு மற்றும் நி கூற்றுக்களில் சரிய மீதியை வெ படுத்துவதற்கு உ நேரத்தில் சீராக் செய்யப்பட வேண்டும்.

		ஆம் ஆண்டுகளில் வெள்ள பாதிப்பு கோரிக்கை ஒதுக்கங்கள் ரூபா 491,424,871 ஆல் குறைக்கப்படுவதுடன் தற்போது நாளதுவரையாக்கல் செயற்பாடு மற்றும் மிகை ஒதுக்கங்களை அகற்றல் செயற்பாட்டில் உள்ளது.	
iii)	மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் கடன் கழிவிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த ரூபா 833,899,635 அல்லது 58 சவீதத்திற்காக அனுப்புதல்கள் பெற வேண்டியவையாக ரூபா 1,417,548,336 ஆன தொகை பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 583,648,701 தொகையான இருக்கின்ற மீதிகளின் அறவீட்டுத் தன்மைகளுக்கான ஆவணச்சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	சபையானது திரும்ப பெறுதலின் கீழ் அறிவிட வேண்டிய "ஒமேகா லைன்" மீள்காப்புறுதி அறவீடு தொடர்பில் மீள் காப்புறுதி தரகர்களிடமிருந்து ஈமெயில் உறுதிப்படுத்தல்களை பெற்றிருந்தது. (வரையறுத்த சற்ரேஜி காப்புறுதி தனியார்). தரகர் சொல்லப்பட்ட கோரிக்கையின் அறவீட்டின் மீது நிபந்தனை விதித்திருந்தார். ஆகவே, தீம்ப செலுத்துதலில் மீள்காப்புறுதிக்கான கடன் தள்ளுபடி ஏற்பாடு குறித்த ஏற்பாடுகளிற்காக கிடைத்த நோக்க சான்றுகளின் அடிப்படையில் செய்யப்பட்டது. மேலும், மீதிகளை அறவிட்டமைக்கான சான்றுகள் எதுவம் கிடைத்திருக்கவில்லை. ஆகவே, கணக்கீட்டு கொள்கை பிரகாரம் ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.	சபையானது நியா மற்றும் மெய்மையா செய்யக்கூடிய சான்றுகளின் அடிப்படையில் க தள்ளுபடிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதை உறுதிப்படுத்தவதற்கு பெறவேண்டிய காப்புறுதிக்கான அ வரி மதிப்பீடு மற் ஆவணப்படுத்தல் நடைமுறையை வலுப்படுத்தப்பட வேண்டும்.
iv)	செலுத்த வேண்டிய தரகு தொடர்பில் ரூபா 149,768,140 தொகை மற்றும் கணக்குகள் மற்றும் மீள்காப்புறுதி திணைக்கள தொடர்பில் செலுத்த வேண்டிய மீதி ரூபா 22,465,243 ஆன தொகை 2022 ஆம் ஆண்டிலிருந்து மாற்றமடையாதிருந்தது என அவதானிக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் மீள்காப்புறுதி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதி உள்ளக திணைக்கள மீதியாக உள்ளதுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொது இணைக்கப்பட வேண்டியிருந்தது என அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் 2022 ஆம் ஆண்டிற்கான இலாப தரகினை செலுத்தவதற்கு பணப்பாளர் சபை தீர்மானித்தது. இதன்படி சபையானது 2025 இல் செலுத்த வேண்டிய இலாப தரகினை செலுத்தியிருந்தது. மேலும் நிதித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 22,465,243 உள்ளக திணைக்கள மீதியாக உள்ளதுடன் 2025 இல் செலுத்தப்படும்.	சபையானது தன்மை நீண்டகால செலு வேண்டியவை அல் உள்ளக திணைக்களம உள்ளது என குறிப்ப நேரகால மீளா இணக்கம் செய் மற்றும் நிலுவைய இருக்கின்ற செலு வேண்டியதை தீர்ப்ப செய்தல் என் செய்யப்பட வேண்டும்.
v)	சபையானது 2 முதல் 5 ஆண்டுகளிற்கு மேலாக மாற்றமடையாதிருந்த மற்றும் அறவிடப்படாதிருந்த ரூபா 8,519,231 கூட்டுத் தொகை ஏனைய நிதியல்லாத சொத்துக்களாக பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் நியாயமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	ரூபா 8,519,231 தொகையான ஏனைய நிதியல்லாச் சொத்துக்களின் மொத்தம் முன்னைய ஆண்டிலிருந்து முற்கொண்டுவரப்பட்ட நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்றவையாகும். சபையானது எதிர்கால அறிக்கையிடல் காலப் பகுதியில் அந்த மீதிகளை	சபையானது நிலுவைய இருக்கின்ற நிதியல்ல சொத்துக்களின் அறவீட்டுத் தன் மதிப்பிடுவதற்கும் இதன்படி கடன்தள்ளு ஏற்பாடுகளை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க

		தெளிவாக்குவதற்கும் ஏற்பாடுகளை செய்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கும்.	வேண்டும்.

1.6. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்தவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2022 சனவரி 18 ஆந் திகதிய 2/2022 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவு	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுகின்ற நடமாடும் தொலைபேசிகளின் கிரயம் உத்தியோகத்தர்களால் தனிப்பட்ட ரீதியில் இறுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் சபையானது 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 253,000 செலவழித்து மூன்று (3) ஊழியர்களிற்காக நடமாடும் தொலைபேசிகள் கொள்வனவு செய்திருந்தது. மேலும், சபையால் 2016 முதல் 2023 வரையான காலப்பகுதிக்காக நடமாடும் தொலைபேசிகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,074,071 ஆன மொத்த கிரயம் ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் முறையான பொருளிருப்பு பதிவு, கையேற்கப்பட்ட மற்றும் கையளிக்கப்பட்ட ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	சபையானது வியாபார செயற்பாட்டு உதவிகளிற்காக 2020 ஆகஸ்ட் 18 இல் எடுத்த (தீர்மானம் 165-04) தீர்மானத்தில் உத்தியோகத்தர்களிற்கு உத்தியோகபூர்வ நடமாடும் தொலைபேசிகளிற்கு அனுமதித்திருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிவுறுத்தலை பின்தொடர்ந்து 2023 பெப்ரவரி 10 இல் இவ்வசதி இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஊழியர்கள் இராஜினா செய்ததிலிருந்து கட்டயமாக தெளிவுபடுத்தலை அறிமுகப்படுத்தவதன் மூலம் முன்னேற்ப்பட்டிருந்த வழங்கப்படும் மற்றும் பெறப்படுகின்ற தொலைபேசிகளிற்காக பொருளிருப்பு பதிவு மற்றும் ஆவண நடைமுறை உள்ளது.	உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,545,895,266 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,835,723,619 ஆக இருந்தது. ஆகவே நிதி விளைவுகளில் ரூபா 289,828,353 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த அழிக்கப்பட்ட தவணைப்பணம் மற்றும் பயிர் காப்புறுதி வரி என்பவற்றின் வீழ்ச்சியே வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கின் பகுப்பாய்வு

அதிகரிப்பு அல்லது வீழ்ச்சியன் சதவீதங்களுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டின்பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட விடயம்	2023 ரூபா	2022 ரூபா	முரண் ரூபா	முரண் %	முரணிற்கான காரணம்
வருமானம்					
சிறு கடன் மீதான வட்டி	144,229	1,955	142,275	7278	சிறு கடன் தீர்ப்பனவின் அதிகரிப்பு
முதிர்ச்சியடைநத வற்றிற்கான வட்டி வருமானம்	42,267,223	71,806,844	(29,539,621)	(41)	2023 ஆம் ஆண்டின் பொது SLDB முதலீடுகளின் முதிர்ச்சி
ஏனைய வருமானம்	178,231,424	1,369,925,753	(1,191,694,329)	(87)	2023 ஆம் ஆண்டின் பொது பரிமாற்ற நட்டங்கள் ஏற்பட்டமை
மொத்த பதிவழிக்கப்பட்ட தவணைப் பணம்	11,402,441,499	12,201,341,213	(798,899,714)	(7)	2023 ஆம் ஆண்டின் பொது மீள் காப்புறுதி தவணைபண வீழ்ச்சி
சேகரிக்கப்பட்ட பயிர் காப்புறுதி வரி	2,441,408,966	2,572,862,779	(131,453,813)	(5)	தொடர்புபட்ட உறுப்பினர் நிறுவனங்களின் இலாப வீழ்ச்சி
செலவினம்					
SSCL செலவினம்	221,957,913	17,884,044	204,073,869	1141	அக்ரஹார மீதான SSCL அதிகரிப்பு
பெறவேண்டிய தவணைப்பண தள்ளுபடி	148,315,734	12,054,127	136,261,608	1130	பெறவேண்டிய தவணைப் பணங்களில் மேலதிக தள்ளுபடி ஏற்பாடு வழங்கல்
பெறவேண்டிய மீள்காப்புறுதி தள்ளுபடி	863,896,464	-	863,896,464	100%	2023 ஆம் ஆண்டின் பொது பெறவேண்டிய மீள் காப்புறுதி மீதான தள்ளுபடி ஏற்பாடு வழங்கல்

2.3 விகித பகுப்பாய்வு

முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு பிரதான வீதங்கள் பின்வருமாறு உள்ளன.

விபரங்கள்	2023 %	2022 %
மொத்த இலாப எல்லை	97.4	99.9
செயற்பாட்டு இலாப எல்லை	59.3	41.0
தேறிய இலாப எல்லை	37.0	33.0

ஈடுபடுத்திய மூலதன வருவாய	21.0	44.0
உரிமை மூலதன வருவாய்	29.0	35.0
மொத்த சொத்து சுழற்சி வீதம்	40.0	50.0

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
புள்ளிவிபர மற்றும் தொகை மதிப்பீட்டு திணைக்களத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிபர பொக்கற் புத்தகம் - 2022 இன் பிரகாரம் அரை அரச உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை அண்ணளவாக 2023 இல் 240,000 ஆகவும் 2024 இல் 217,255 ஆகவும் இருந்தது. இதற்கு மாறாக அரை அரசு அக்ரஹார திட்டத்தின் கீழ் அண்ணளவாக 2023 இல் 40,000 ஊழியர்களும் 2024 இல் 30,700 ஊழியர்களும் பதிவு செய்யப்பட்டிருந்தனர். 200,000 அரை அரசாங்கஊழியர்களிற்கு பொருத்தமான கணிசமான பகுதிக்கு மேல் திட்டத்தின் மேவுகைக்கு வெளியே இருந்தது. என்பதைக் குறிக்கின்றது. அரை அரசாங்க துறையில் அதன் சந்தை அடிப்படை, தவணைப் பண வருமான அதிகரிப்பு மற்றும் அதன் வலுப்படுத்தல் என்பவற்றினை விரிவாக்கவதற்கு சபைக்காக தவறிவிடப்பட்ட சந்தர்ப்பங்களை கட்டமைப்பு மற்றும் திறன்மிக்க பாதுகாப்பு பொறிமுறை இன்மையை பிரதி நிதித்துவப்படுத்துகின்றது.	அரை அரசு அக்ரஹார திட்டத்தின் கீழ் முக்கியமற்ற திட்டமாக 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்டுது புதிய அறிமுகம் மற்றும் உயர்ந்த தவணைப்பணம் என்பவற்றுடன் தற்பொது மீளப் பதியப்பட்டிருந்தது. சந்தைப்படுத்தல் திணைக்களம் வெற்றிகரமான 83 நிறுவனங்களை கவர்ந்திருந்ததுடன் நாடு பூராவுமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஊடாக திட்டதை விரைவாக விளம்பரப் படுத்துகின்றது. எவ்வாறாயினும், பங்குபற்றல் தன்னார்வ மற்றும் சில அரச வங்கிகளை போன்ற நிறுவனம் மற்றும் SOE கள் தங்கள் சொந்த அல்லது காப்புறுதி நிறுவனங்கள் விரும்புகின்றனர்	அரை அரசு அக்ரஹார திட்டத்தில் உறுப்புரிமையை அதிகரிப்பதற்கு வியாபார விரிவாக்கல் உபாயங்களை விருத்தி செய்து அமுலாக்குவதற்கு பரிந்துரைத்துள்ளது.

3.2 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
சபையின் அனுமதித்த பதவியணிப் பிரகாரம் 2025 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு 15 ஊழியர்கள் பற்றாக் குறையாக இருந்தது. அத்திகதியில் உள்ளவாறு ஐந்து (5) நிறைவேற்று முகாமைத்துவ பதவியை கொண்டுள்ளது. உதவி பொது முகாமையாளர்- நிதி மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்	இன்று, சபையின் நாளது வரையாக்கப்பட்ட பதவியணி நிலை நிரப்ப்படாதிருக்கின்ற பிரதான வெற்றிடங்களை காட்டுகின்றது. AGM – நிதி மற்றும் CEO பதவிகள் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பரிந்துரை அடிப்படையில் முன்னர் இடை நிறுத்தப்பட்ட	சபையானது சிரேஸ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறிப்பாக பிரதான பதவியினரின் நிலவும் பற்றாக் குறையினை வெளிப்படுத்துவதற்கு முற்கூறப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட மனித வள உபயங்களை

பதவிகள் முறையே 2019 திசெம்பர் 16 மற்றும் 2022 யூன் 27 இலிருந்து பதிற்கடமை அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.
ஆகவே, இது குறிப்பிடத்தக்க காலப் பகுதியிலிருந்து நிலவுகின்ற முகாமைத்துவ பதவி வெற்றிடங்கள் சபையின் சுமூகமான மற்றும் வினைத்திறனான செயற்பாட்டைப் பாதிக்கக்கூடும்.

உத்தியோகத்தர்களால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தமையால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. DGM–காப்புறுதி விசாரணை 2025 யூன் 19 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆபத்து முகாமைாளர் பணிக்கான ஆட்சேர்ப்பு 2025 பெப்ரவரி 9 இல் பத்திரிகை விளம்பரத்தில் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பொருத்த மற்றமையால் முன்னைய நிகழ்வு தவறியமையால் இன்னமும் நிலுவையில் உள்ளது. அரசாங்க சம்பள மட்டங்களிற்கு குறைவாக தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஈர்ப்பதில் தடையாக உள்ளது. மேலும், MM தரத்திற்கு குறைவான பதவிகளிற்கான சேர்ப்பனவு தெரிவு காலம் தாமதப்பட்டது. இருக்கின்ற வெற்றிடங்களிற்கான ஆட்சேர்ப்பு வேண்டப்பட்ட அனுமதிகளை பெறுவதன் மூலம் செயற்படுத்தப்படும்.

பின்பற்றப்பட வேண்டும்.